# Thibyanul Haque.

*Author:* Moulwi As-Shaikh **S.M.H.Saifudeen Alim Sufi Quadiri.**

# திப்யானுல் ஹக்

*எழுதியவர்கள்:* மௌலவி அஷ்ஷெய்கு **S.M.H.முஹம்மதலி ஸைபுத்தீன் காதிரி ஸூபி அவர்கள்**

### என்னுரை

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹுதஆலாவின் திருநாமத்தால் துவக்கம்.

அகிலத்திற்கோர் அருள்பிழம்பாய் அவதரித்த அண்ணல் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர்கள், தோழர்கள், இறைநேசர்கள், ஷெய்குமார்கள் அனைவர்களின் மீதும் கருணையும், ஈடேற்றமும் உண்டாவதாக !

சங்கைக்குரிய எங்களது ஷெய்குனா மௌலானா மௌலவி அஷ்ஷெய்குல் காமில் அஷ்ஷாஹ் **ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம்** ஸூபி, சித்தீகி, காதிரி, காஹிரி, கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அஸீஸ் அவர்கள் **<u>இள்ஹாருல் ஹக் - சத்தியப்பிரகடனம்</u>** என்ற நூலை இஸ்லாமியக் கொள்கை - வஹ்ஹாபிக் கொள்கை எவை என்று கோடிட்டு, பிரித்துக் காட்டி, ஈமான், ஷிர்கு, குப்று, தவ்ஹீது மற்றும் முக்கியமான விஷயங்களை விளக்கி வெளியிட்டுள்ளார்கள்.

அதைபோல் வழிகெட்ட தப்லீக்ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் வஹ்ஹாபிக் கொள்கை, நோக்கம், தப்லீக் ஜமாஅத்தின் திட்டம், செயல்பாடுகளை புட்டுபுட்டாக, அவர்களது நூற்களிலிருந்து ஆதாரம் காட்டி, **<u>தப்லீக் என்றால் என்ன?</u>** என்ற பெயரில் ஒரு நூலும் வெளியிட்டுள்ளார்கள்.

இந்நூலில் **<u>திப்யானுல் ஹக் - சத்திய விளக்கம்</u>** என்ற பெயரில் ஒரு நூல் வெளியிடுவோம் என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களது ஜீவிய காலத்தில் அது சாத்தியமாகாமல் போய்விட்டது.அவர்களது அபிலாஷையையும், எனது நீண்ட கால எண்ணத்தையும் பூர்த்தி செய்வதற்காக அதே பெயரில், இக்காலத்திற்கு மிக தேவையான, தேட்டமான விஷயங்களை, ஞானவான்களான உலமாக்கள், புகஹாக்கள் - மார்க்க வல்லுனர்கள், இமாம்களின் நூற்களின் மேற் கோள்களை ஆதாரபூர்வமாக காட்டி **<u>திப்யானுல் ஹக் - சத்திய விளக்கம்</u>** என்ற பெயரில் எங்கள் ஷெய்குனா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அஸீஸ் அவர்களின் ஆசியை வேண்டியவனாக அவர்களது **<u>இள்ஹாருல் ஹக் - சத்தியப் பிரகடனம்</u>** என்ற நூலுக்குத் தொடர் நூலாக இதை அவர்கள் வபாத்தான புனித ரமழான் பிறை 24-ல் வெளியிடுகிறேன்.

நேர்மையான சிந்தனையாளர்களுக்கு - குதர்க்கவாத மரமண்டைகளுக்கு அல்ல - இது ஆதாரமாகவும், பயள்ளதாகவும் இன்ா அல்லாஹ் அமையும், இது சமயம் அடியேனை மறக்காமல் நினைவுகூர்ந்து துஆச் செய்யுங்கள். **திப்யானுல் ஹக் - சத்திய விளக்கம் பாகம்-2** என்றும் வெளியிடவும் நாடியுள்ளேன். துஆச் செய்யுங்கள்.

சமுதாய ஊழியன்

**S.M.H. முஹம்மது அலி சைபுத்தீன்**

**வஸீலா தேடுதல்**

*சங்கைமிகு நபிமார்கள், வலிமார்கள், நல்லடியார்களைக் கொண்டு வஸீலா தேடுவது, உதவிக்கு அழைப்பது, இரட்சிப்புத் தேடுவது, சிபாரிசு வைப்பது, முன்னோக்குவது எல்லாம் நம் சுன்னத் ஜமாஅத்தினர்களிடம் ஆகுமாகும்.*

*இவைகள் சங்கைமிகு நபிகள் நாயகம், மற்றும் நபிமார்கள், வலிமார்கள், நாதாக்கள், குர்ஆன், ஹதீஸ்கள், கண்ணியமிகு இமாம்களின் சொற்கள், செயல்களின் மூலம் தரிப்பட்ட வைகளாகும்.*

*இவைகளை வழிகேடர்கள் தங்களது அறியாமையினால் அல்லது மனமுரண்டாக, பிடிவாதமா கத்தான் மறுப்பார்கள்.*

*ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வைப் பயந்துக் கொள்ளுங்கள் அவனளவில் வஸீலா தேடுங்கள். அவன் வழியில் போர் புரியுங்கள். நிச்சயம் ஜயசீலராவீர்கள்*

*(அல்குர்ஆன் 5.35)*

*இங்கு வஸீலா என்பது கொண்டு கருத்து நல்வணக்கங்கள், நற்கிரிகைகள் என்றும், அவைகளை செய்த நல்லோர்கள் என்றும் இரு கருத்துக்கள் தப்ஸீர்களில் எழுதப்பட்டுள்ளது. நல்வணக் கங்கள், நற்கிரிகைகள் என்பதைக் காண அவைகளை செய்த புண்ணியவான்கள் என்பது மிக பொருத்தமாகும். நல்வணக்கங்கள் என்பது அஃராழ் - ஆதேயங்களாகும் அவைகளை செய்தவர்கள் தாத்து -ஆதார பொருள்களாகும்.அஃராழுகளுக்கே மதிப்பும்,அந்தஸ்தும் இருக்குமானால் ஆதாரமான நபிமார்கள், வலிமார்களை முன் நிறுத்தி வேண்டினால் நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.நம் நல்வணக்கங்களை அல்லாஹ் ஏற்றுக் கொண்டானா? என்பது சந்தேகமானது நிச்சயமற்றது.*

*மேலும் அல்லாஹ்வை பயந்துக் கொள்ளுகள் என்று சொல்லப்பட்ட தக்வாவுக்குள் எல்லா நல் வணக்கங்கள் அனைத்தும் உள் அடங்கிவிட்டப்பின், அவனளவில் நல்வணக்கங்களைக் கொண்டு வஸீலா தேடுங்கள் என்பது பொருத்தமில்லாததாகும்.*

*ஹதீஸ்களும், இமாம்களின் சட்டமும் உள்ளடங்கி யதற்கு ஆதாரமாக இமாம் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,இமாம் நவவிரஹிம ஹுல்லாஹ் அவர்களின் "**ஈழாஹ்**" எனும் நூலின் 500- வது பக்கத்தின் ஓர குறிப்பில் எழுதியதை இவண் தருகிறோம் :-*

*"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு வஸீலா - உதவி தேடுவது முன்னோர்களான நபிமார்கள், அவ்லியாக்கள், மற்று முள்ளவர்களின் நடைமுறை யாகும். ஆதார ஹதீஸு களில் ஒரு ஹதீஸ் கீழ்வருகிறது.இந்த ஹதீஸை இமாம் ஹாகிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்து இது சரியான ஹதீஸு என்றும் கூறுகிறார்கள்".*

*நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் :-*

*"தவறை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்த போது, இறைவா! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் என்னை மன்னித்தே தவிர என்னை விட்டு விடாதே என்றார்கள். உடனே ஆதமே! எப்படி முஹம்மதை அறிந்தீர்.நான் அவரை படைக்கவே இல்லையே என்று அல்லாஹ் கேட்டான்.*

*இறைவா ! உனது கரம் கொண்டு என்னைப் படைத்து உன் ரூஹில் நின்றும் என்னில் ஊதிய போது என் தலையை உயர்த்தினேன்.அர்ஷின் தூண்களின் மீது "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றஸூலுல்லாஹி" என்று எழுதப் பட்டதை கண்டேன் உனது பெயருடன் படைப்பினங்களின் மிகச் சிறந்தவரை தவிர வேறு ஒருவரையும் சேர்க்கமாட்டாய் என்பதை அறிந்தேன் என்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்.*

*ஆதமே உண்மை சொன்னீர், நிச்சயம் அவர் படைப்பினங்களில் மிக சிறந்தவர்தான், அவர் பொருட்டைக் கொண்டு நீர் என்னிடம் கேட்டதினால் உன்னை மன்னித் தேன்.அவர் இல்லையா யின் உன்னை படைத்திருக்கமாட்டேன் என்று அல்லாஹ் சொன்னான்.*

*இமாம் நஸாயி அவர்களும், இமாம் திர்மிதி அவர்களும் இந்த ஹதீஸை அறிவித்து இது சரியானது என்றும் இமாம் திர்மிதி அவர்கள்இதை சரிகண்டு முள்ளார்கள்.*

*கண் பார்வை இழந்த ஒருவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார். எனக்கு சுகம் கிடைக்க அல்லாஹ் இடம் துஆ கேளுங்கள் என்றார். அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நீர் நாடினால் துஆச் செய்கிறேன். நீர் நாடினால் பொறுமையாக இருங்கள். அது தான் உமக்கு நல்லது என்று சொன்னார்கள். அம்மனிதர் துஆச் செய்யுங்கள் என்றார், அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நல்லபடி உளுசெய்து இந்த துஆவைக் கொண்டு துஆ செய்யுங்கள் என்றார்கள்.*

இறைவா! உனது நபி முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நபிய்யுர்ரஹ்மத் - அருள் நபியைக் கொண்டு கேட்கிறேன், முன்னோக்குகிறேன், யாமுஹம்மது - உங்களைக் கொண்டு எனது இரட்சகனின் பக்கம் எனது தேவை நிறைவேற முன்னோக்குகிறேன்.என்னில் அவர்களது சிபாரிசை ஏற்றுக் கொள்வாயாக ! என்பது அந்த துஆ.

இமாம் பைஹகி அவர்கள் இந்த ஹதீஸை சரிகண்டும் அம்மனிதர் பார்வையுள்ள மனிதராக நின்றார்கள் (சென்றார்கள்) என்றும் அறிவிக்கிறார்கள்.

நபி நாயகத்தை முன் நிறுத்தி கேட்பதும்,சிபாரிசுக்கு அழைப்பதும்,உதவி தேடுவதும் யாமுஹம்மது என்று மரியாதையாக அழைப்பதும் துஆ கேட்கும் போது சுத்தமாக உளூவுடன் இருப்பது நல் லது என்றும் இன்னும் பல கருத்துக்களை உள்ளடக்கியதாக இந்த ஹதீஸ் இருப்பது குறிப்பிடத்தக் கது.

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது துஆவில் உனது நபியின் பொருட்டாலும்,எனக்கு முன்னால் உண்டான நபிமார்கள் பொருட்டாலும் என்று துஆச் செய்வார்கள் என்று இமாம் தப்ரானி ரஹிமஹுல்லாஹ் உறுதியான தொடரைக் கொண்டு அறிவிக்கிறார்கள்.

இமாம் இப்னு ஹஜர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். தவஸ்ஸுல் வஸீலா தேடுவது, இரட்சிப்பு தேடுதல், ஷபாஅத்து தேடுதல், தவஜ்ஜுஹு - முன்நிறுத்தி வேண்டுதல், நபி நாயகத்தைக் கொண்டும் மற்றும் நபிமார்களைக் கொண்டும்(ஆகும் என்பதில்)வித்தியாசம் இல்லை. (இதை எவரும் மறுக்கவில்லை) அவ்லியாக்களைக் கொண்டும் இவ்வாறு தான் (ஆகும்).

இப்னு அப்துஸ்ஸலாம் அவர்கள் இதை (அவ்லியாக்களை கொண்டு மட்டும்) மறுத்த போதிலும் இமாம் ஸுப்கி அவர்கள் (இதை) ஆதரித்துள்ளார்கள்.

காரணம் - அமல்களை - வணக்கங்களைக் கொண்டு வஸீலா தேடுவது இவைகள் அஃராழுகள் - ஆதேயங்களாக இருப்பதுடன் ஆகும் என்று வந்துள்ளது, சிறப்பிற்குரிய தாத் - ஆதார பொருளாக இருக்கும் அவ்லியாக்களை (நேரடியாக) கொண்டு தேடுவது மிக மிக ஏற்றமாகும்.

இன்னும் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மழை வருசிக்கத் தேடினார்கள். இதையாரும் மறுக்கவில்லை. நபி நாயகத்தைக் கொண்டு வஸீலா தேடுவதின் கருத்து சிலசமயம் நபி நாயகத்திடமே(நேரடியாக) தேடுவதாகும். ஏன்? அவர்கள் ஹயாத்தாகவே இருக்கிறார்கள். அவர்களிடம் கேட்பவரின் கேள்வியை கேட்கிறார்கள்.

நீண்டதொரு ஹதீஸில் :- ஜனங்களுக்கு உமர் ரலியல்லாஹு அவர்களின் (கிலாபத்தின்)காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. ஒருவர் நபி நாயகத்தின் (ஸல்

லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் (புனித) கப்ருக்கு வந்தார். "யாரஸூலல்லாஹ்!உங்களது உம்மத்தினர்களுக்கு மழை பொழியுங்க என்று கூறினார், அவருக்கு கனவில் தோன்றி "மழை பொழியும்"என்று அறிவித்தார்கள், அதன் பிரகாரம் மழை பொழிந்தது.

ஆதாரம் இமாம் நவவி அவர்களின் ஈழாஹ் எனும் நூலின் ஓர குறிப்பில் அல்லமா இப்னு ஹஜர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் பக்கம் 500.

**வஸீலா தேடும் வகைகள் மூன்று**

1.இறைவா இன்ன அவ்லியாவின் பொருட்டால் எனது இன்ன காரியத்தை நிறைவேற்றுவாயாக என்று இறைவனிடம் கேட்பது.

2. இன்ன அவ்லியாவே எனது இன்ன காரியம் நிறைவேற இறைவனிடம் கேளுங்கள் என்று அவ்லியாவிடம் கேட்பது.

3. இன்ன அவ்லியாவே எனது இன்ன காரியத்தை நீங்களே நிறைவேற்றித் தாருங்கள் என்று அவ்லியாக் களிடம் கேட்பது.

இம் மூன்று வகைகளாக கேட்பது ஆகும் என்றும் இம் மூன்று வகையும் ஒன்றுதான் என்றும் இமாம் தகிய்யுத்தீன் ஸுபுக்கி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஷிபா உஸ்ஸகாம் பக்கம் 134

எந்த வகையைக் கொண்டு கேட்டாலும் கருத்து எதார்த்தில் அல்லாஹ் இடமிருந்துதான் வருகிறது. அவனேதான் காரியங்களை உண்டாக்குகிறான். அவ்லியாக்கள் உதவி - காரியம் உண்டாகு வதற்கு ஸபபு - காரணமாகவும். மள்ஹர் - உதயஸ் தானமாகவும் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்த சக்தியைக் கொண்டுதான் செய்கிறார்கள். அல்லாஹ்வின் சக்தி இல்லாமல் சுயமாக செய்கிறார்கள் என்று எந்த முஸ்லிமும் நம்ப மாட்டான். நன்மை தீமை எல்லாம் அல்லாஹ்வின் கற்பனையைக் கொண் டே தான் நடக்கிறது என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும்.

உலகில் நடக்கும் செயல்களை அவைகள் வெளியாகும் வழியளவில் சேர்ப்பது நிஸ்பத்து மஜாஸி (இரவலான சேர்மனம்) என்றும் செயலுடைய அல்லாஹ் அளவில் சேர்ப்பது நிஸ்பத்து ஹகீகி(எதார்த்தமான சேர்மானம்)என்று வல்லுனர்கள் கூறியுள்ளார்கள்.குர்ஆன் ஹதீஸுகளிலும் வந்துள்ளன.இந்த முறையில்தான் உலகாதி காரியங்களும் நடைமுறையும் உள்ளன.

இந்த அடிப்படையில்தான் அவ்லியாக்களிடம் நேரடியாக கேட்பதும், அவர்கள் அதை நிறைவேற்றித் தருவதுமாகும்.ஹகீகி, மஜாஸி விளங்காமல் குழம்புவதும், குழப்புவதும் மடமையாகும்.

**கப்றுகளை, புண்ணிய ஸ்தலங்களை, பெரியார்களின் கை,கால்களை முத்தமிடுதல்**

*இவைகள் அனைத்தும் ஆகுமாகும். அதிலும் குறிப்பாக கைகளை முத்தமிடுவது சுன்னத்துமாகும். இமாம் அல்ஹாபிழுல் இராக்கி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:-*

*புண்ணிய ஸ்தலங்களை பரக்கத்தை நாடி முத்தமிடுவதும், சாலிஹீன்கள் - நல்லவர்கள் கை கால்களை நல்லெண்ணத்தை பொறுத்து முத்தமிடுவதும் அழகானதும் புகழப்பட்டதுமாகும்.*

*உம்தத்துல்காரி ஷரஹுல் புகாரி பாகம் 4. பக்கம் 607*

*பதாவா பிக்யத்துல் முஸ்தர்ஷிதீன் பாகம் 1 பக்கம் 357*

*ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவதில் நின்றும் ஸாலிஹீன்களின் கப்றுகளை முத்தமிடுவது (ஆகும்) என்பதை உலமாக்கள் கிரஹித்து எடுத்துள்ளார்கள் என்று இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கிதாபுத் தவ்ஷீஹ் ஷரஹுல் புகாரிஎனும் நூலில் கூறியுள்ளார்கள்.*

*ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது ஷரீஅத் - மார்க்கத்தில் உள்ளது என்பதிலிருந்து கண்ணியமுள்ள மனிதர்கள், மற்ற வைகளை முத்தமிடுவது ஆகும் என்பதை கிரஹித்து எடுத்துள்ளார்கள். மனிதர்களின் கையை முத்தமிடுவது ஒழுக்கத்தை சார்ந்தது என்பது முன் சென்றுவிட்டது. மற்றவைகளை முத்தமிடுவதற்கு இமாம் அஹ்மதிப்னு ஹன்பலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அறிவிப்பு :-*

*அவர்களிடம் நபி நாயகத்தின் மின்பர் படியை முத்தமிடுவது, புனித கப்றை முத்தமிடுவது பற்றி கேட்கப்பட்டபோது தவறில்லை என்றார்கள். இதை அவர்களின் மகன் அப்துல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவித்தார்கள். ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த மக்கா உலமாக்களில் ஒருவரான இமாம் இப்னு அபீஸைபுல் யமனி அவர்கள் முஸ்ஹபு, (குர்ஆன்) ஹதீதுகளி தொகுப்புகள்,சாலிஹீன்களின் கப்றுகளை முத்தமிடுவது ஆகும் என்று சொன்னார்கள்.*

*பதாவா பிக்யா பாகம் 3- பக்கம் 309*

*கப்றுகளை முத்துவதும், அவைகளை தொடுவதும் ஆகும் என்று முஹிப்பித்திப்ரி இமாம் மூலம் இமாம் தீபுன்னாஷிர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.*

*பதாவா பிக்யா பாகம் 3 பக்கம் 309*

*பரகத்திற்காக சாலிஹீன்களின் கப்றுகளை முத்தமிடுவது ஆகும்.*

*பதாவா ரமலி பாகம்4. பக்கம் 106*

*பாசமில்லாது இருந்தாலும் சரி (பாசத்தோடு இருந்தாலும் சரி) குழந்தைகளை முத்துவதும், சீதேவித்தன்மை போன்றவைகளுக்காக மய்யித்தை- மரணித்தவர்களை முத்துவதும், ஆலிம், அறிஞர், சாலிஹ் - நல்லவர் சதீக் - நண்பர் ஷரீப்-சிறப்பிற்குரியவர்கள் போன்றவர்களின் கைகளை முத்துவது சுன்னத்தாகும். செல்வத்திற்காக, அல்லது இது போன்றவை (பதவிகளுக்கு) காக அல்ல, இது போன்றே அவர்களுக்கு (மரியாதைக்காக) எழும்பி நிற்பதும் சுன்னத்தாகும்.இக்காலத்தில் இவைகள் கட்டாயம் வாஜிப் என்று கூட சிலர் சொல்லியிருக்கிறார்கள்.காரணம் இவைகளை விடுவதால் (பாசம், பந்தம்) துண்டிக்கப்படுகின்றது.*

*கல்யூபி பாகம் 3. பக்கம் 213*

*நபிமார்களை, அவ்லியாக்களை ஜியாரத் செய்வதற்காக ஸூபியாக்கள் செல்லுவதும்,அதுபோது கொடிகளை கொண்டு போவதும்,அவர்களது கப்றுகளை முத்தமிடுவதும் வழமையாக்கியிருக்கிறார்கள். இவைகள் ஹராமா? அல்லவா?*

*இதற்கு இமாம் ஷெய்கு கலீலி ஷாபிஈ அவர்கள் பத்வா கொடுத்துள்ளார்கள். கப்றுகளை முத்தமிடுவது ஆகும்.மற்றவை ஏதும் தடுக்கப்பட்டவை அல்ல.இவைகளை வழி கேடர்களில் வம்பர்களும், பித்அத்துகாரர்களுமே அன்றி வேறு எவரும் மறுக்கமாட்டார்கள்.*

*பதாவா கலீலி பக்கம் 351.*

**கப்றுகளை ஜியாரத் செய்வது**

*நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்று ஷரீப் , மற்றுமுண்டான நபி மார்கள், அவ்லியாக்களின் கப்றுகளை ஆண்கள், பெண்கள் ஜியாரத் செய்வது சுன்னத்தாகும்.*

*“கப்றுகளை ஜியாரத் செய்வதை நான் உங்களுக்கு விலக்கியிருந்தேன். இப்போது அவைகளை நீங்கள்(ஆண்கள்,பெண்கள்)ஜியாரத் செய்யுங்கள். ஏனெனில் நிச்சயமாக அது மறுமையை நினைவூட்டக்கூடியதாக இருக்கிறது.” என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.*

*அறிவிப்பாளர் முஸ்லிம்.*

*“எவர் எனது கப்றை ஜியாரத் செய்தாரோ அவருக்கு எனது ஷபாஅத் கடமையாகிவிட்டது.”என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.*

*அறிவிப்பாளர் தாரகுத்னி*

*அன்னை ஆயிஷா சித்தீக்கா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்கிறார்கள் :“ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதில் (அடக்கமாகி) இருக்கிறார்களோ அந்த என் வீட்டில் எனது (அன்னியவர்களை விட்டும் மறைக்கும்) ஆடையை கழற்றிய நிலையில் போய் வருபவ*

*ளாக இருந்து வந்தேன். அவர்கள் என் கணவரும், தகப்பனாரும் தானே எ ன்று கூறுபவளகாகவும் இருந்தேன். எப்போது உமர் ரலியல்லாஹு அன் ஹு அவர்கள் அவர்களுடன் அடக்கப்பட்டார் களோ அல்லாஹ்வின் ஆ ணையாக என்மீது (அன்னியவர்களை விட்டும் மறைக்கும்) ஆடை கட்டிய வளாகவே அன்றி அங்கு நுழைவதில்லை. ஏனெனில் உமர் ரலியல்லாஹு அ ன்ஹு அவர்களுக்கு வெட்கப்பட்டு என்றார்கள்."*

*அறிவிப்பாளர் அஹ்மது, மிஷ்காத் பாகம் 1 பக்கம் 157*

*குறிப்பு இந்த ஹதீஸில் ஒரு பெண்,அதிலும் அன்னை ஆயிஷா சித்தீக்கா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி (நாயகத்தை) யையும் அவ்லியாக்களை ள(அபூபக்கர்,உமர் ரலியல்லாஹு அன்ஹுமா) யையும் ஜியாரத் செய்தா ர்கள் என்பதும், அவர்கள் கப்றுகளில் ஹயாத்துடனே இருக்கிறார்கள் என்ப தும் ஊர்ஜிதமாகிறது.*

*நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கப்று ஷரீபை ஆண்கள் ஜியாரத் செய்வது சுன்னத்தாக இருப்பது போன்று, பெண்களுக்கு ம் ஜியாரத் செய்வது சுன்னத்தாகும். ஏனெனில் அது வணக்க வழிபாடுகளி ல் மிக உயர்வானதாகும். இதைப் போன்றே இதர நபிமார்கள்,அவ்லியா க்கள்(கப்றுகளை ஜியாரத் செய்வதும் சுன்னத்தாகும்)இதை ஷெய்குனா ரம லி இமாம் சொன்னார்கள். ஜீவித்திருப்பவர்களை சொந்தம் பந்தம் நன்மை, சினேகிதம் போன்ற தொடர்பில்(ஜீவியகாலத்தில்) ஜியாரத் செய்வது போ ன்று அவர்கள் மரணித்தவர்களானாலும் ஜியாரத் செய்யலாம். இதை போ ன்று அவர்கள் பேரில் கிருபை கொண்டு அல்லது படிப்பினை பெறுவது மற் றும் இது போன்ற காரியங்களுக்கும் ஜியாரத் செய்யலாம்.*

*கல்யூபி பாகம் 1 பக்கம் 351*

*பெண்களுக்கு நபிமார்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்றுகளை ஜியாரத் செய்வது பலமான சுன்னத்தாகும். அவ்லி யாக்கள், உலமாக்கள் கப்றுகளை ஜியாரத் செய்வதும் சுன்னத்தாகும். கப்று களை முத்தமிடுவதை தடுக்கப்படாது.*

*பதாவா கலீலி பக்கம்351*

**குழப்பங்கள், அனாச்சாரங்கள் நிறைந்திருக்கும் போது ஜியாரத் செய்வது ஆகும ா?**

*குழப்பங்கள், அனாச்சாரங்கள் நிறைந்திருந்தால் அவைகளை ஜியாரத் செய்ய செல்லுபவர்கள் முடிந்தால் கையால் தடுக்க வேண்டும்.இல்லாவிடின் நாவால் தடுக்க வேண்டும் இதுவும் முடியா விட்டால் மனதால் வெறுக்க வேண்டும்.*

*இது அல்லாமல் ஜியாரத் ஆகாது என்று சொல்வது மடத்தனமாகும். கெட்டவைகள் இருப்பதி னால் நன்மையான சுன்னத்தை தடுக்கவோ, விடவோ முடியாது.சங்கைமிகு இமாம்களின் தீர்ப்புகளைப் பாருங்கள்.*

*அவ்லியாக்களின் கப்றுகளை அவர்களது பிறப்பு (இறப்பு - கந்தூரி) தினங்களில் பெண்கள் ஆண்களுடன் கலந்திருப்பது போன்று மற்றுமுள்ள அதிகமான குழப்பங்கள்(அனாச்சாரங்கள்) அங்கு அதிகமாக நடக்கும் போது ஜியாரத் செய்வது ஆகும்.இல்லை சுன்னத்தாகும். இமாம் ஷெய்கு இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது பதாவா குப்ராவில் (பாகம்2 பக்கம் 24) சொன்னதின் குறிப்பு இதோ:-*

**<u>கேள்வி:</u>** *குறிப்பிட்ட காலத்தில் (கந்தூரி தினத்தில்) அதற்கென்று பிரயாணம் செய்து அவ்லியாக்களின் கப்றுகளை ஜியாரத் செய்வது, அங்கு பெண்கள்ஆண்களுடன் கலந்திருப்பது, அதிகமான விளக்குகள் ஏற்றுவது போன்று அதிகமான குழப்பங்கள் சேர்ந்திருக்கும் போது ஆகுமா?*

**<u>பதில்:</u>** *அவ்லியாக்களின் கப்றுகளை ஜியாரத் செய்வது விரும்பத்தக்க வழிபாடாகும். அதற்காக பிரயாணம் செய்வதும் அப்படியே (விரும்பத்தக்க வழிப்பாடாகும்) பித்அத்துகள்,ஹராம்கள் இருப்பதற்காக நல்வழிப்பாடுகளை விட முடியாது.மனிதர்கள் அவைகளை செய்ய வேண்டும். பித்அத்துக்களை மறுக்க வேண்டும்.முடிந்தால் நீக்கவும்வேண்டும். சுன்னத்தான தவாபு( கஃபத்துல்லாவை வலம் சுற்றுவது) வாஜிபான தவாபைக்கூட புகஹாக்கள் - மார்க்க அறிஞர்கள் பெண்கள் இருக்கும் போதும் செய்ய வேண்டும் என்றே சொல்லியி ருக்கிறார்கள். எங்கிலும் பெண்களை விட்டும் தூர மாக செய்ய வேண்டுமென்றே சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்றே இதுவும்(ஜியாரத் செய்வதும்)*

*பெண்கள் கலந்திருக்கிறார்கள் என்ற பயத்தினால் ஜியாரத்தை தடுக்க வேண்டுமென்றால் தவாபு செய்வது, ரமலு -தவாபு செய்யும் போது குதித்து குதித்து செல்வது, அரபாவில் தங்குவது, முஸ்தலிபாவில் தங்குவது, கல் அடிப்பது போன்றவைகளை எல்லாம் தடுக்க வேண்டியது வரும். இவைகளில் எதையும் எந்த இமாம்களும் தடுக்கவில்லை. பெண்கள் கலந்திருப்பதை மட்டுமே தடுத்திருக்கிறார்கள்.அதை போன்றே ஜியாரத்தை தடுக்க முடியாது.*

*இப்பயத்தால் தடுப்பவர்களின் எதிர்ப்பைக் கண்டு ஏமாந்துவிடாதே அவ்லியாக்களின் ஜியாரத்தை பித்அத், முன்னோர்களின் காலத்தில் இல்லை என்ற கூற்று மறுக்கப்பட்டதாகும்.*

*பித்அத்துதான் என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் எல்லா பித்அத்துகளும் தடுக்கப்படாதே பித்அத்துகளில் சுன்னத்தான இல்லை வாஜிபான - கட்டாய கடமையான பித்அத்துகளும் இருக்கின்றனவே.*

*பதாவா கலீலி பக்கம் 351*

**<u>அவ்லியாக்களின் பெயரில் கொடியேற்றுவது</u>**

கம்பத்தில் பறக்கவிடப்படும் கொடிக்கு அலம் - நிஷான்-ஜண்டா என்று பல பெயர்கள் சொல்லப்படுகின்றன.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போர் முனைக் கொடிகளுடன் சென்றுள்ளதாகவும் திருமக்கா முகற்றமாவை வெற்றிக் கொண்டு நுழையும் போது கொடி பிடித்ததாகவும் கீழ்கண்ட ஹதீஸ்கள் அறிவிக்கின்றன.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய கொடி கருமையாகவும், சிறிய கொடி வெண்மையாகவும் இருந்தது.

நூல் திர்மிதி - இப்னு மாஜா, ஆதாரம் மிஷ்காத் பக்கம் 237

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:-நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிற்குள் நுழைந்தார்கள். அவர்களது கொடி வெண்மையாக இருந்தது.

நூல் திர்மிதி - இப்னு மாஜா -ஆதாரம் மிஷ்காத் பக்கம் 338

ஸூபிய்யாக்களான ஞானவான்கள், அன்பியாக்கள், அவ்லியாக்களை ஜியாரத் செய்வதற்காக போகும் போது கொடிகள் பிடித்துக் கொண்டும் கொட்டு அடித்துக் கொண்டும் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் கூடுமா? என்ற கேள்விக்கு அல்லாமா ஷெய்கு முஹம்மது கலீலி ஷாபிஈ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவைகள் ஆகுமானவைகள், வேண்டப்படுப வைகள். இவைகளை வழிகெட்ட வம்பர்கள் தான் மறுப்பார்கள் என்று பதிலளித்துள்ளார்கள்.

ஆதாரம் பதாவா கலீலி பாகம் 2 பக்கம் 351

மைய்யித்தின் (கப்றின்) தலைமாட்டில் கல், அல்லது மரக்கட்டை வைப்பது சுன்னத்தாகும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஸ்மானிப்னு மழ்வூன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமாட்டில் ஒரு பாறைக்கல்லை வைத்தார்கள்.அதைக் கொண்டு எனது சகோதரரின் கப்று என்று தெரிந்து கொள்வேன். என் குடும்பத்தில் இறந்தவர்களையும் அங்கு அடக்கிக் கொள்வேன் என்று சொன்னார்கள்.

நூல் ரஹுல் மஹல்லி பாகம்1 பக்கம் 351

இஆனத்துத்தாலிபீன் பாகம் 2 பக்கம் 119

*மறுமையில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கண்ணியப்படுத்துவ தற்காக அவர்களின் திருக்கரத்தில் "லிவாவுல்ஹம்த்" எனும் கொடி கொடுக்கப் படுகின்றது.*

*"எனது கரத்தில் "லிவாவுல்ஹம்த்"எனும் கொடி இருக்கும் (இதனால்) எனக்கு பெருமையில்லை. ஆதமும் அவர்களல்லாத எந்த நபியும் என் கொடியின் கீழ் இருந்தே தவிர இல்லை". இந்த ஹதீஸை அபூஸயீத் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.*

*நூல் திர்மிதி ஆதாரம் மிஷ்காத் பக்கம் 513*

*"கியாமத் நாளில் "லிவாவுல்ஹம்த்"எனும் கொடியை நான் சுமப்பேன்." அறிவிப்பாளர் :இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா*

*நூல் திர்மிதி, தாரமீ, மிஷ்காத் பக்கம் 513*

*எனவே கொடி ஏற்றுவதன் மூலம் இது ஒரு மஹானின் கப்று என்று அறிவிப்பதாலும்,ஒரு வலியை கண்ணியப்படுத்துதல் இருப்பதாலும், மனதிற்கு உற்சாகத்தை ஏற்படுத்துவதாலும் இது மார்க்கத்தில் ஆகுமான காரியமாகும். ஆகாது என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை.*

*ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு தேசியக் கொடி என்றும் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒரு கட்சிக் கொடி என்றும் ஏற்படுத்தி அதற்கான கொடியேற்று விழா, கொடி தினம் என்று கொண்டாடி வரும் இக்காலத்தில் அவ்லியாக்களுக்கு கொடி ஏற்றக் கூடாது என்று சொல்வது அறிவீனத்தையும், அவ்லியாக்கள் மீதுள்ள பகைமையையும் காட்டுகின்றது. அல்லாஹ் அதை விட்டும் நம்மை காப்பாற்றுவானாக!*

**<u>கப்றுகளின் மீது பூக்கள் போடுவது</u>**

*நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரு கப்றுகளின் அருகாமையில் செல்லும் போது இரு மய்யித்துகளும் அதாபு - வேதனை செய்யப்படுகிறார்கள். ஒருவர் சிறு நீர் கழிக்கும் போது பேணுதலாக இருக்கவில்லை. மற்றொருவர் கோள் சொல்பவராக இருந்தார் என்று கூறி ஈரமான (பேரீச்ச மரத்து) மட்டை எடுத்து இரண்டாக பிளந்து ஒவ்வொரு கப்றுகளிலேயும் ஒரு மட்டையாக நட்டினார்கள். யாரஸூலல்லாஹ் ஏன் இப்படி செய்தீர்கள் என்று சஹாபாக்கள் கேட்ட போது, இவை (மட்டைகள்) காய்ந்துவிடாது இருக்கும் போதெல்லாம் இவர்களுக்கு வேதனை இலேசாக்கப்படும் என்று சொன்னார்கள்.*

*மிஷ்காத் பாபுல் கலா முதல் பிரிவு.*

*கப்ரின் மீது பசுமையான மட்டையை வைப்பது சுன்னத்தாகும்.ஏனெனில் ஹதீஸை பின்தொடர்வதற்காகவும், இன்னும் அதன் தஸ்பீஹின் பரக்கத்*

*தைக் கொண்டு வேதனை எளிதாக்கப் படுவதற்காகவும், ஈரமான பூக்கள் போன்றவைகளை போடுவது வழக்கமாக ஆக்கப்பட்டுள்ளதும் சுன்னத்தாகும். காய்ந்து போகாது இருக்கம் போது அதில் எதையும் எடுப்பது ஹராமாகும்.*

*பத்ஹுல் முஈன், இஆனா பாகம்2 பக்கம் 119*

*ஈரமான மட்டை, பூக்கள் போடுவது சுன்னத்தாகும். அதற்கு உடமையான (போட்ட)வனைத் தவிர ஈரமாக இருக்கும் போது எவரும் எடுப்பது கூடாது. காய்ந்து விட்டால் வக்பு செய்யப்பட்டதாக இருந்தாலும் எவரும் எடுக்கலாம். ஏனெனில் வழக்கம் அதுவாகும். ஈரமாக இருக்கும் காலமெல்லாம் வேதனை மய்யித்திற்கு எளிதாக்கப்படுகிறது என்றும் அவைகள் மய்யித்திற்காக பிழை பொறுக்கத் தேடுகிறது என்றும் வந்துள்ளது.*

*கல்யூபி பாகம் 1 பக்கம் 351*

*“ஹதீஸை பின் தொடர்ந்து கப்றுகளின் மீது ஈரமான மட்டையை வைப்பது சுன்னத்தாகும். இந்த ஹதீஸின் தொடர் (ஸனது) சரியானது இதன் தஸ்பீஹின் பரக்கத்தால் வேதனை எளிதாக்பப்படுகின்றது. காய்ந்த மட்டை தஸ்பீஹ் செய்வதைவிட ஈரமான மட்டை தஸ்பீஹ் செய்வது பூரணத்துவமாகும்.இந்த ஹதீஸை ஒழுங்குபடுத்தி பூக்கள் அவை போன்றவைகளை போடுவது வழக்கமாக்கப்பட்டுள்ளது.”*

*துஹ்பா பாகம் 3 பக்கம் 197*

*ஈரமான மட்டையை கப்ரின் மீது வைப்பதும் சுன்னத்தாகும். இவ்வாறே பூக்கள் இவைகளை போன்ற ஈரமானவைகளை வைப்பதும் (சுன்னத்தாகும்.)*

*முஃனி பாகம்1 பக்கம் 364*

*ரோஜா பூக்கள் மற்றும் இதர பூக்களை கப்ரின் மீது வைப்பது அழகாகும்.*

*பதாவா ஆலம் கீரி*

*இந்த ஹதீஸைக் கொண்டு பூக்கள், மட்டையை வைப்பது வழக்கமாக இருப்பதால் நம் தோழர்களில் பின்னோர்கள் சுன்னத்து என்று தீர்ப்பளித்துள்ளார்கள்*

*தஹ்தாவி பக்கம் 364*

**கப்றுகளின் மேல் போர்வை போர்த்துவது**

*அவ்லியாக்கள், சாலிஹீன்களின் கப்றுகளின் மேல் போர்வை போர்த்துவது அவர்களை கண்ணியப்படுத்துவதற்காகவும் அடையாளப்படுத்துவதற்காகவும் ஆகும்.*

*ஷெய்கு அப்துல் கனி நாபிலிஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது கஷ்புர் நூர் அன் அஸ்ஹாபில் குபூர் எனும் நூலில் சொல்கிறார்கள் ஷரிஅத்திற்கு உட்பட்ட நல்ல பித்அத்துகளுக்கு சுன்னத் என்று பெயர் வைக்கப்படும்.(அதன் அடிப்படையில்)உலமாக்கள்,அவ்லியாக்கள் சாலிஹீன்கள் கப்ருகளின் மீது குப்பாக்கள் கட்டுவது பொதுமக்களின் கண்களில் கப்ராளிகளின் கண்ணியத்தை வெளிப்படுத்துவதற்காகவும் அவமரியாதை செய்யாதிருப்பதற்காகவும் நோக்கமானால் ஆகுமான காரியமாகும்.*

*ரூஹுல் பயான் பாகம்2 பக்கம் 487*

*அவ்லியாக்கள், சாலிஹீன்களின் கப்றுகளின் மேல் போர்வைகள் தலைப்பாகைகள், ஆடைகளை வைப்பது மக்ரூஹ் என்று சில புகஹாக்கள் - மார்க்க அறிஞர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.எனினும் பொதுமக்களின் கண்களில் கண்ணியம், மரியாதை இருக்க வேண்டும் என்ற நோக்கம், அல்லது அந்த கப்ராளிகளை அவமரியாதை செய்யாதிருக்க வேண்டும் என்ற நோக்கம் அல்லது பயபக்தியை ஒழுக்கத்தை ஜியாரத் செய்பவர்களிடம் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கம் இருக்க வேண்டு மென்றிருந்தால் இவை அனைத்தும் ஆகும் என்று நாங்கள் சொல்கிறோம்.*

*ரத்துல் முஹ்தார் பாகம் 5 பக்கம் 357*

*சிறப்பிற்குரியவர்கள், கண்ணியமிக்கவர்கள் என்று மற்ற கப்றுகளை விட பிரித்துக் காட்டுவதற் காகவே போர்வைகள் போர்த்தப்படுகிறது. அது மனதில் பயபக்தியையும் உள்ளத்தில் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது.இதை அனுபவத்திலும் காண்கிறோம்.*

*அவ்லியாக்களுக்கு குளிர் அடிக்கிறதா? என்று வழிகேடர்கள் கேட்பது போன்று அல்ல. அப்படியானால் கஃபத்துல்லாஹுக்கு போர்வை போர்த்தியிருப்பது அல்லாஹுக்கும், இறை ஆலயத்திற்கும் குளிர் அடிக்கிறதா? இல்லை இல்லை கண்ணியத் திற்காக மரியாதைக்காகத்தான் தொன்று தொட்டு போர்த்தப் படுகின்றது. அதைப் போன்று அவ்லியாக்களின் கப்றுகளுக்கும் என்று அறிக.*

**<u>ஜியாரத்தின் போது கப்ராளிகளின் முகத்தை முன்னோக் குவதும், கைகளை உயர்த்துவதும்</u>**

*ஜியாரத்தின் போது கப்றாளிகளின் அருகாமையில் இருந்து சூராக்கள் ஓதும் போதும், துஆக்கள் கேட்கும் போதும் கப்றாளிகளின் முகத்தை முன்னோக்குவதும்,(உட்காராமல்)நிற்பதும்,துஆக்களின் போது வானத்தளவில் கைகளை உயர்த்துவதும் சுன்னத்தாகும்.*

*கல்யூபி பாகம் 1 பக்கம் 351*

*அதிகமதிகம் ஜியாரத் செய்வதும் நல்லவர்கள் சிறப்பிற்குரியவர்களின்*

*கப்றுகளின் அருகாமை யில் நீண்ட நேரம் நிற்பதும் முஸ்தஹப்பாகும்.*

*முஃனி - ஜியாரத் பாடம் பாகம் 1 பக்கம் 365*

**மரணித்தவர்களுக்கும் அவர்கள் கப்றுகளுக்கும் மரியாதை செய்ய வேண்டும்.**

*“ஜனாஸாவைக் கண்டால் எழுந்து நில்லுங்கள் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.”*

*அறிவிப்பாளர் இப்னு சயீது மிஷ்காத் பாகம்1 பக்கம் 144*

*“கப்றுகளின் மேல் உட்காராதீர்கள். அதனளவில் தொழாதீர்கள். என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.”*

*அறிவிப்பாளர் அபூமர்ததுல் கன்வி முஸ்லிம் பாகம்1 பக்கம்312*

*ஜனங்கள் ஷுஹதாக்களின் கப்றுகளை ஜியாரத் செய்கிறார்கள். அவைகளை மரியாதை செய்கிறார்கள். இது ஷுஹதாக்கள் இப்போதும் ஹயாத்தாக இருக்கின்றார்கள் என்று நாம் சொல்வதின் மீது அறிவிக்கின்றது என்று இமாம் ராஜி ரஹிமஹுல்லாஹ் சொல்கிறார்கள்.*

*தப்ஸீர் கபீர் பாகம் 4 பக்கம் 147*

*கப்றை ஜியாரத் செய்கிறவர் அவரது (கப்றாளிகளின்) ஜீவிய காலத்தில் எப்படி அருகாமையில் நெருங்கி பழகுபவராக இருந்தாரோ அதே மாதிரி கண்ணியப்படுத்துபவராக அவரது கப்ருக்கு அருகாமையில் நெருங்குவது சுன்னத்தாகும் என்று இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொன்னார்கள்.*

*துஹ்பா பாகம் 3 பக்கம் 175*

*முடிந்த மட்டிலும் ஜியாரத் செய்யும் போது மரணித்தவர் களுக்கு மரியாதை செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக சாலிஹீன்களுக்கு மிக வெட்கத்துடனும், மரியாதை யுடனும் வெளிரங்கத்திலும் உள்ரங்கத்திலும் மரியாதை செய்ய வேண்டும்.நிச்சயமாக சாலிஹீன்களிலிருந்து வெளிப்படையான மிக உதவிகள் ஜியாரத் செய்பவர்களின் அதபு-ஒழுக்கத்திற்கும் தன்மைகளுக்கும் தக்கவாறு கிடைக்கின்றன.*

*லம் ஆத் ரஹு மிஷ்காத் பக்கம் 154*

**பித்அத்காரர்கள், பாவிகளின் பின்னால் தொழுவது**

*பித்அத்காரன், பாஸிக் (மார்க்கத்தில் விலக்கப்பட்ட பாவங்களை செய்தவன்) பின்னால் தொழுவது மக்ரூஹ் (அப்படி தொழுதால் மக்ரூஹ் உடன் தொழுகை கூடிவிடும்.) பித்அத்துக்காரன் பின் னால் தொழுவது மக்ரூஹ்*

*என்பதின் கருத்து அந்த பித்அத்தினால் அவனை காபிர் என்று நாம் சொல்ல ாமல் இருந்தால்தான். அப்படி அந்த பித்அத்தினால் அவனை காபிர் ஆகிவி ட்டான் என்று நாம் சொன்னால் அறவே அவன் பின்னால் தொழுவது கூடாது. தொழுகை நிறைவேறாது.*

*இஆனா பாகம் 2 பக்கம் 47*

*(ஐவேளை) ஜமாஅத்திற்கு கூறப்படும் தங்கடங்களை போன்று தான் ஜும்ஆ தொழுகைக்கும் பொருந்தும்.*

*இஆனா பாகம் 2 பக்கம் 51*

*"பித்அத்காரர்கள் என்பதின் கருத்து சுன்னத் வல் ஜமாத்து காரர்களுக்கு மாற்றமாக இருப்பவர் களாவார்கள்."*

*பதாவா ஹதீதிய்யா பக்கம் 280*

*"பர்மாவி இமாம் அவர்கள் சொன்னதாக புஜை ரமியில் இருப்பதாக ஷ ர்வானி அவர்கள் சொல்கிறார்கள் பாஸிக், பித்அத்துக்காரர்களின் பின்னால் கைர் - நன்மையும் சலாஹ் -நேர்மையும் உடையவர்கள் தொழுவது ஹராம ாகும்.(அப்படி அவர்கள் பின்னால் இவர்கள் தொழுதால் அந்த)பாஸிக், பித் அத்துக்காரர்கள் மீது நல்லெண்ணம் கொள்வதின் பேரில் மக்களை தூண்டு வதாகிவிடும்."*

*ஷர்வானி ஹாஷியத்து துஹ்பா பாகம் 2 பக்கம் 294*

*ஆகவே இப்படிப்பட்ட பாஸிகீன்கள், பித்அத்துக் காரர்கள் இமாமாக இருக்கும் ஜமாஅத்தில் சுன்னத் வல் ஜமாஅத்துக்காரர்கள் கலந்து தொ ழுவது கூடாது.*

**<u>பித்அத்துக்காரர்களுடன் கலந்துறவக்கூடாது</u>**

*ஈமான் கொண்டவர்களே உங்களது பெற்றோர்கள், சகோதரர்கள் ஈமா னை விட குப்ரை நேசிப்பார்களேயானால் அவர்களை அன்பர்களாக எடு த்துக் கொள்ளாதீர்கள். எவர்கள் உங்களில் நின்றும் அவர்களை அன்பர்கள ாக எடுத்துக் கொள்கிறார்களோ அவர்கள் அநீதக்காரர்களாவார்கள்.*

*அல்குர்ஆன் 9.23*

*எவர் பித்அத்துக்காரர்களுக்கு மரியாதை செய்கிறாறோ அவர் இஸ்லாத் தை இடிப்பதற்கு உதவி செய்தவராவார்.*

*அறிவிப்பாளர்: இப்றாகீம் இப்னு மைஸரா, நூல்: மிஷ்காத்*

*அவர்கள் (பித்அத்காரர்கள்) வியாதிஸ்தர்களானால் நோய்விசாரிக்க போகாதீர்கள். அவர்கள் மரணமானால் (மய்யித்தில்) ஆஜராகாதீர்கள், அவர்களை சந்திப்பீர் களோயானால் அவர்களுக்கு சலாம் சொல்லாதீர்கள் அவர்களோடு சேர்ந்து உட்காராதீர்கள். அவர்களுடன் தண்ணீர் குடிக்காதீர் கள். (உணவு) உண்ணாதீர்கள். அவர்களுடன் திருமணம் செய்யா தீர்கள். அவர்களுக்கு (மய்யித்து) தொழுகாதீர்கள், அவர்களுடன் தொழாதீர்கள்.*

*அறிவிப்பாளர்: அபூஹுரைரா, நூல்: முஸ்லிம்*

*பித்அத்துக்காரனுக்கு சலாம் சொல்வீர்களேயானால் முகமலர்ச்சியுடன் அவனை சந்திப்பீர்களேயானால் அவனுக்கு சந்தோஷமானதைக் கொண்டு வரவேற்பீர்களேயானால் அல்லாஹ் இறக்கி வைத்த(வேதத்)தை இலேசா க்கி விட்டான் (மரியாதை இல்லாமல் ஆக்கி விட்டான்.)*

*பதாவா ஹதீதிய்யா பக்கம் 280*

*ஈமான் சரியாகத் தரிபட்டிருக்கவும், தவ்ஹீது கலப்பட்டதாக (இக்லாஸ ாக) இருக்கவும் விரும்புகிறவன் (பித்அத்து) கொள்கைகாரர்களோடு மனம் மருவுதலாக இருக்கவோ, அவர்களோடு நெருங்கி பழகி இருக்கவோ அவர் களுடன் கூடிப் புசிக்கவோ குடிக்கவோ மாட்டான். அவர்களோடு தனது வெறுப்பை காட்டியே நடக்க வேண்டும். எவனாகிலும் பித்அத்காரர்க ளோடு இன்புறப் பேசிஒப்பி நடப்பானேயானால் அல்லாஹுதஆலா அவ னை விட்டும் ஈமானுடைய இன்பத்தை உரிந்து விடுவான். எவனாகிலும் பித்அத்துக்காரர்களை உகந்து நேசிப்பானேயானால் அவனுடைய இருதயத் தை (கல்பை) விட்டும் ஈமானுடைய ஒளிவைப் பிடுங்கப்பட்டுவிடும்*

*ஹகாயிகுத்தன்ஸீல், தப்ஸீர் அஸீஸீ.*

*எவனாகிலும் பித்அத்காரனை உகந்து நேசித்தால் அல்லாஹ்தஆலா அவ னுடைய (நல்ல) அமலை அழித்துவிடுவான். அவனுடைய கல்பை விட்டும் ஈமானுடைய பிரகாசத்தைப் போக்கப்பட்டு விடும். எவனாகிலும் பித்அத்க ாரர்களோடு கோபமாக இருக்கிறதாக அல்லாஹ் அறிந்தால் அவனுக்குநல்ல அமல்கள் குறைவாக இருந்த போதிலும் அல்லாஹுதஆலா அவனுடைய ப ாவங்களை எல்லாம் பொறுத்து விடுவான் என்றே நான் ஆதரவு வைக்கிறே ன். பித்அத்துக்காரனை ஒரு பாதையில் போகக் காண்பாயேயானால் நீ வேறு பாதையில் போ.*

*சொன்னவர் புளைல் இப்னு இயாளு*

*அறிவிப்பாளர்: முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹும் - நூல் குன்யத்துத் தாலிபீன்*

**சகோதரர்களே**

*மேலே குறிப்பிட்ட போதனைகளையும் நன்கு சிந்தித்து உண்மையை சத்திய விளக்கத்தை உணர்ந்து இதயத்தில் பதிய வைத்து தீய கூட்டத்தி*

னரின் உறவையும்,பந்தத்தையும் அகற்றி நல்லோர்களான ஸுன்னத் வல் ஜமாஅத்தார்களுடனேயே சகவாசம் பூண்டிருப்பீர்களாக.

அல்லாஹ் நம்அனைவர்களையும் கெட்ட கொள்கைக் காரர்கள் உடைய தீங்கை விட்டும் காப்பாற்றுவானாக ஆமீன்.